# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 7 ( 2012 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 12)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? **ஆதாம், ஏவாள்**
2. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? **காயின், ஆபேல்**
3. சிறுவன் சாமுவேலை கடவுள் எத்தனை முறை அழைத்தார்? **4**
4. யாக்கோபின் மனைவியர் பெயர் என்ன? **லேயா, ராகேல்**
5. யாக்கோபுவிற்கு எத்தனை புதல்வர்கள்? **12**
6. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார்? **40ம் நாள்**
7. இயேசு உயிர்த்த பின் முதன்முதலில் யாருக்கு தோன்றினார்? **மகதலா மரியாவுக்கு**
8. எம்மாவு சீடர்கள் எத்தனை பேர்? **2**
9. இயேசுவின் நண்பன் இலாசர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? **பெத்தானியா**
10. இறந்து இயேசுவால் உயிர்பெற்று வாழ்வடைந்தவர்கள் யாவர்? **லாசர், நயீன் ஊர் கைம்பெண்ணின் மகன், தொழுகைக் கூடத்தலைவரின் மகள்**
11. ''இவர் உண்மையான இஸ்ரயேலர்ரூபவ் கபடற்றவர்'' இவ்வாறு இயேசு யாரைக் குறித்து கூறினார்? **நத்தனியேல்**
12. நத்தனியேலை இயேசுவிடம் அழைத்து வந்த சீடர் யார்? **பிலிப்பு**
13. பிலிப்பு எந்த ஊரைச் சேர்ந்தவர்? **பெத்சாய்தா**
14. பேதுரு எங்கு எவ்வாறு கொல்லப்பட்டார்? **நீரோவின் விளையாட்டு மைதானத்தில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு கொல்லப்பட்டார்**
15. ''தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்'' இவ்வுண்மை அடங்கிய இயேசுவினால் கூறப்பட்ட உவமை யாது? **பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை**
16. கிறிஸ்தவ மறையை இந்தியாவுக்கு முதலில் கொண்டு வந்தவர் யார்? **புனித தோமையார்**
17. கொதிக்கும் எண்ணெய்யில் போடப்பட்ட பின் நாடுகடத்தப்பட்டவர் திருத்தூதர் யார்? **புனித யோவான்**
18. விவிலியத்தில் கூறப்படும் தன் இனவிடுதலைக்காக போராடிய பெண்கள் யாவர்? **எஸ்தர், யூதித்**
19. ''நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர்'' இந்த நாமத்தைப் பெற்றவர் யார்? **திருமுழுக்கு யோவான்**
20. குழந்தை இயேசுவை, ஆலயத்தில் தூய்மைச்சடங்கை நிறைவேற்ற கொண்டுவந்தபோது, குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தி கடவுளைப்போற்றிய இறைமனிதர் யார்? **சிமியோன்**
21. யோர்தான் நதியில் திருமுழுக்குப்பெற்ற இயேசுவை ஆவியானவர் எங்கே கூட்டிச்சென்றார்? **பாலைநிலத்திற்கு**
22. இயேசு தனது ஊழியத்தை கலிலேயாவில் தொடங்கியபின் தமது வழக்கத்தின்படி அவர் ஒய்வுநாளில் எங்குள்ள தொழுகைக் கூடத்திற்குச் சென்றார்? **நாசரேத்து**
23. இயேசு தன்மீது அன்புள்ளதா என பேதுருவிடம் எத்தனை தடவைகள் கேட்டார்? **3 தடவைகள்.**
24. திரு அவையின் எக்காலத்திற்கும் தலையாயிருப்பது யார்? **கிறிஸ்து.**
25. திரு அவையின் முதல் தலைவர் யார்? **பேதுரு.**
26. திரு அவையின் தற்போதைய தலைவர் யார்? **திருத்தந்தை பிரான்சிஸ்**
27. திருத்தந்தை பிரான்சிசின் பிறப்பிடம் எது? **ஆர்ஜன்டீனாவின் தலைநகர் புவனோர்ஸ் அயர்ஸ்.**
28. திருத்தந்தை பிரான்சிஸ் எப்போது பிறந்தார்? **1936 மார்கழி 17.**
29. திருத்தந்தை பிரான்சிசின் இயற்பெயர் என்ன? **ஜோர்ஜ் மாரியோ பர்கோலியோ.**
30. திருவிவிலியத்தை எழுத பயன்படுத்தப்பட்ட மொழிகள் யாவை? **எபிரேயம், கிரேக்கம், அரமாயிக்**
31. திருத்தூதர்கள் எத்தனை பேர்? **12**
32. இஸ்ராயேலரின் கோத்திரங்கள் எத்தனை? **12**
33. இயேசு தேவாலயத்தில் காணாமற் போன போது அவருக்கு வயது என்ன? **12**
34. நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று கூறியவர் யார்? **பேதுரு**
35. பேதுருவின் தந்தை பெயர் என்ன? **யோனா**
36. இயேசு தோற்றம் மாறிய போது உடனிருந்த சீடர்கள் யாவர்? **பேதுரு, யோவான், யாக்கோபு**
37. இயேசு தோற்றம் மாறிய போது அவருடன் உரையாடியவர்கள் யாவர்? **எலியா, மோசே**
38. இயேசு வரியாக செலுத்திய பணத்தின் பெயர் என்ன? **திராக்மா**
39. இறைவனோடும், மனிதரோடும் முறிந்த உறவை மீண்டும் புதுப்பிக்கும் அருளடையாளம் எது? **ஒப்புரவு**
40. ஒருவர் இயேசுவோடும், பிற மனிதர்களோடும் உறவில் ஒன்றிணைவதை மையமாகக் கொண்ட அருளடையாளம் எது? **நற்கருணை**
41. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை? **ஒப்புரவு, நோயில் பூசுதல்**

42. ''என் ஆண்டவரே என் தேவனே'' என அறிக்கையிட்டு இறைநம்பிக்கையை வெளிப்படுத்திய திருத்தூதர் யார்? **புனித தோமா**
43. தொழிலாளர்களின் பாதுகாவலராக திருஅவையினால் அங்கீகாரம் செய்யப்பட்ட புனிதர் யார்? **புனித சூசையப்பர்**
44. இயேசு தம் தாய் சிலுவையின் அருகில் இருப்பதைக் கண்டு யாரிடம் அவரை ஒப்படைத்தார்? **திருத்தூதர் யோவான்**
45. இயேசுவின் அன்புச் சீடர் என குறிப்பிடப்படும் திருத்தூதர் யார்? **யோவான்**
46. யோவான் நற்செய்தியின்படி சிலுவையில் இறப்பதற்கு முன் தன் ஆவியை ஒப்படைத்தவராக கூறிய வார்த்தைகள் என்ன? **எல்லாம் நிறைவேறிற்று**
47. இயேசுவின் அன்புச் சீடர் என அழைக்கப்படும் திருத்தூதர் யார்? **யோவான்**
48. சுங்கச்சாவடியில் அமர்திருந்த லேவியிடம் யேசு கூறியது என்ன? **என்னை பின்பற்றி வா**
49. ஆண்டவருக்கான வழியை ஆயத்தப்படுத்துங்கள் என கூறிய இறைவாக்கினர் யார்? **திருமுழுக்கு யோவான்**
50. நான்கு நற்செய்தியாளருள் ஒருவரும், இயேசுவின் சீடருமான மத்தேயு எவ்வூரைச் சேர்ந்தவர்? **கலிலேயா**

## இடைவெளி நிரப்புக

51. '' உங்களுக்கு ……… உரித்தாகுக'' - **அமைதி** (லூக்24: 36)
52. '' இன்று இந்த வீட்டிற்கு ……… உண்டாயிற்று'' - **மீட்பு** (லூக் 19: 8)
53. '' அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் ………. செய்தேன்'' - **பாவம்** (லூக் 15: 21)
54. '' இது உங்களுக்காக கொடுக்கப்படும் ………. உடல்'' - எனது (லூக்22:19)
55. '' நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் …………செலுத்துங்கள்'' - அன்பு (யோவான் 13:34)
56. '' ஆண்டவரே என் ஆயர், ……. குறையில்லை'' - எனக்கேதும் (திருப்பாடல் 25:1)
57. '' அருள் மிகப்பெற்றவரே வாழ்க! …..…… உம்மோடு இருக்கின்றார் '' **- ஆண்டவர்** (லூக் 1:26)
58. '' பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர், உம் வயிற்றில் வளரும் ………. ஆசீ பெற்றதே'' **- குழந்தையும்** (லூக் 1: 42)
59. '' நீரே என் ……நீரே என் கடவுள் '' - **ஆண்டவர்** (யோவான் 21: 28)
60. '' இவரே ……தாய்'' - உம் (யோவான்19: 26-27)

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### அமைதியின் செபம்

இறைவா!

அமைதியின் கருவியாய் என்னை உருவாக்கும். எங்கு வெறுப்புள்ளதோ, அங்கு மன்னிப்பையும் எங்கு பகையுள்ளதோ, அங்கு பாசத்தையும் எங்கு அவநம்பிக்கை உள்ளதோ, அங்கு நம்பிக்கையையும் எங்கு வருத்தமுள்ளதோ, அங்கு மகிழ்ச்சியையும் எங்கு இருளுள்ளதோ, அங்கு ஒளியையும் தாரும்.

ஆறுதல் பெறுவதைவிட, பிறருக்கு ஆறுதல் தரவும் பிறர் என்னை புரிந்து கொள்வதை விட, நான் பிறரை புரிந்து கொள்ளவும் பிறர் என்னை அன்பு செய்வதை விட, நான் பிறரை அன்பு செய்யவும் எனக்கு உதவும்.

ஏனென்றால்,
கொடுப்பதில் தான் பெறுகிறோம், மன்னிப்பதில் தான் மன்னிப்புப் பெறுகிறோம், இறப்பில் தான் நித்திய வாழ்வடைகிறோம். ஆமென்.

**பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)**

அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு
எந்தத் துன்பம் வந்தாலும் என் அன்பு உன்னோடு (2)

குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
எந்த நிலை தான் ஆனாலும் எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் -2

அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும் உன்னை நானோ மறவேனே
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் - 2